**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர், தேதி: 14.06.2023
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உழவர் உற்பத்தியாளர் சங்கங்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

தொழில்நுட்ப வணிக காப்பகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மே 31, 1 மற்றும் 2 ஜீன், 2023 தேதிகளில் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பின் கீழ் இயங்கும் உழவர் உற்பத்தியாளர் சங்கங்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் குறித்த மூன்று நாள் பயிற்சி நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக ஜீன் 13, 14 மற்றும் 15, 2023 தேதிகளில் மூன்று நாள் பயிற்சி நடைபெறுகிறது.

இப்பயிற்சி ATMA, TNSFAC and DAMAB நிதியுதவியுடன் வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் வணிகத்துறை கோயம்புத்துார், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள FPOsஐ சேர்ந்த சுமார் 80 விவசாயிகள் இப்பயிற்சியில் பங்கேற்கின்றனர். வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் ஏ.சோமசுந்தரம் அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து வேளாண் உற்பத்தி பொருட்களை மதிப்புக்கூட்டல் மற்றும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்துதல் வாய்ப்புகளை குறித்து விரிவுரை வழங்கினார். தொழில்நுட்ப வணிககாப்பகத்தின் தலைமை செயல் அதிகாரி, திரு.A.V.ஞானசம்பந்தம், அவர்கள் வரவேற்புரையாற்றினார். இணைப்பேராசிரியர் முனைவர் M.மலர்கொடி, நன்றியுரை ஆற்றினார்.

துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு உழவர் உற்பத்தியாளர் மற்றும் தொடக்கநிலை தொழில் முனைவோர்களுக்கு GoI - PMFME & AIF திட்டங்கள் குறித்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில் நுட்பங்கள், முதலீட்டு பகுப்பாய்வு மற்றும் உழவர் உற்பத்தியாளர்களுக்கு புதிய வணிகத்திற்கான நிதி நிலை, சந்தைப்படுத்துதல் ஒருங்கிணைப்பு, வணிகத்திட்டம், விற்பனை செய்தல், பேக்கேஜிங் மற்றும் பிராண்டிங், இயற்கை விவசாயம், காளான் வளர்ப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர்களுக்கான கணக்கு பராமரிப்பு மற்றும் பதிவு பராமரிப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர்களுக்கு தேனீ வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெறுகிறது.

இப்பயிற்சிக்குப்பின் ஒரு நாள் விவசாய சுற்றுலா தமிழகத்திலும் மற்றும் 5 நாள் விவசாய சுற்றுலா அண்டை மாநிலத்திலும் நடைபெறும். இப்பயிற்சியினால் தொடக்கநிலையில் உள்ள உழவர் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு சந்தைப்படுத்துதல், மற்றும் நிதி ஆதாரங்கள் போன்ற பல்வேறு சவால்களை எதிர் கொள்ளவும் திறன் மேம்படுத்தி கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமையும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பானது 318 உழவர் அமைப்புகளில் உள்ள உறுப்பினர்களை வேளாண் தொழில் முனைவோராக மாற்றுவதற்கு இது போன்ற பயிற்சிகளை நடத்தி வருகிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**